அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:2 Issue : 7 July 2020*

கோட்டை :2 வாயில்:7 ஜூலை 2020

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X

# Aran

International e Journal of Tamil Research

ISSN: 2582-399X



## ஆசிரியர் குழு

முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்

---

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்



**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com
aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் **(Peer Review)**பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

அனைவருக்கும் வணக்கம்

*COVID-19* காரணமாக நமது ஏப்ரல் இதழும் ஜூலை இதழும் வெளிவருவதில் தாமதம் ஏற்பட்டு விட்டது. கட்டுரையாளர்களின் ஒத்துழைப்புக்கும், பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களுக்கும் நமது ஆய்விதழை வாசிக்கும் உலகம்முழுதும் உள்ள தமிழ் நெஞ்சங்களுக்கும் எங்களது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*Hi everyone*

*COVID-19 has delayed the release of our April and July issues. We would like to express our humble respect and gratitude to the authors for their cooperation, to the professors and research students and to the Tamil hearts around the world who read our Research paper.*


அன்புடன்

முனைவர். பிரியாகிருஷ்ணன்

நிறுவனர்/பதிப்பாசிரியர்/நிர்வாகஆசிரியர்,

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*www.aranejournal.com*

*aranjournal@gmail.com*

*PH: +917299587879*

# அகத்தினுள்

எச்சமரபுகளும் பொதுமரபுகளும்
முனைவர். பெ. விஜயலட்சுமி

தொல்காப்பியம் சுட்டும் இலக்கிய வகைகளும் அதன் வளர்ச்சி நிலையும்
அ. வேளாங்கன்னி அமிர்தா

இலக்கணத்தில் இலக்கியத்தரவுகள்: நன்னூல், அகப்பொருள் விளக்கம் மற்றும் மயிலைநாதர் உரை ஆகிய நூற்களை முன்வைத்து
முனைவர். தி. இராஜரெத்தினம்

புறநானூறும்புறங்காடும்
திருமதி. மு. அழகுராணி

சங்கஇலக்கியங்கள் கூறும் போர்க்கள ஆடல் வகைகளும் அவற்றின் தன்மைகளும்
கலாநிதி திருமதி. தாக்ஷாயினி பிரமதேவ்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒலிக்குறிப்புச் சொற்கள்
மா. ஆதிமூலம்

தமிழர் பண்பாட்டில் தாய்த் தெய்வ வழிபாடு
முனைவர். ப. விமலா அண்ணாதுரை

ச. முருகபூபதியின்பூழிப்பாவைநாடகம் :புழுதியாகிப்போனநிலத்தின்குரல்
முனைவர். ம. கருணாநிதி,

ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்களின் வரலாறு
முனைவர்வ. கோபாலகிருஷ்ணன்

முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்

**இலக்கியங்களில் மடலேறுதல்**
**ஓர்ஆய்வு - பொ. பிரபு**

**Was Madras Benighted?: The British Beauracratic Control Over The Swadeshi Press And Political Literaturemadras Presidency, 1908-1912**
**Dr.V.Venkatraman, Ph.D., D.Litt.,**

*Kurinji Life style focused on malasar and kaadar of Anaimalai hills -*
**Dr. G. Vennila**

*Sri KirupaSamuthra Perumal Temple at Nannilam taluk - A Study*
**Mrs. R. Brindakumari**

**வட இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட அரியவகை ஈமச்சின்னங்கள்**
**திருமதி. சிவரூபிசயிதரன்**

**7ஆம் நூற்றாண்டில் தமிழர்கள் பாசிமணிகள் உற்பத்தி செய்த மலேசியாவின் குவாலா செலின்சிங் வரலாற்றுத்தளம்**
**ம. லிங்கேஸ்வரன்**

**Just Another Film Industry: Tamil Cinema in Global India**
**Miss. AmruthaKanapulli**

**முகப்பு**
**புகைப்படம் இணையம்**
**நன்றி**

# இலக்கணத்தில் இலக்கியத்தரவுகள்: நன்னூல், அகப்பொருள் விளக்கம் மற்றும் மயிலைநாதர் உரை ஆகிய நூற்களை முன்வைத்து.

முனைவர் **தி. இராஜரெத்தினம்**

ஆய்வாளர்,

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வு நிறுவனம் (*EFEO*)

*19* & *16*, துய்மா வீதி (*Dumas street*)

புதுச்சேரி *-1*

**ஆய்வுச் சுருக்கம்:**

*தமிழ்மொழியின் எழுத்து மற்றும் சொல் இலக்கணங்களை மட்டும் கூறும் நூல் நன்னூல் (13 நூ.). அகப்பொருள் விளக்கம் (13 நூ.) என்னும் நூல் தமிழ் அக இலக்கணம் கூறும் நூல் ஆகும். நன்னூல் மற்றும் அதன் முதல் உரையாகிய மயிலைநாதர் உரை ஆகியவற்றில் அகம்சார் செய்திகள் இடம்பெற்றுள்ளனவா? அவை பெறும் இடம் என்ன? அல்லது மயிலைநாதர் கூறும் உரையில் இடம்பெறும் ஊர்ப்பெயர்கள், இடப்பெயர்கள், சாதிப்பெயர்கள் முதலியவை அகப்பொருள் இலக்கண நூலாகிய அகப்பொருள் விளக்கத்தில் இடம்பெற்றுள்ள தன்மைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. நன்னூலார், மயிலைநாதர், நாற்கவிராச நம்பி மூவரும் சமகாலத்தவர்களாகலாம் என்னும் கருத்தை முன்மொழிந்து அதனை நிறுவும் முயற்சியாகவும் இக்கட்டுரை விளங்குகிறது.*

**திறவுச் சொற்கள்:**

*அகப்பொருள் விளக்கம், நம்பியகப்பொருள், நன்னூல், மயிலைநாதர், வீரசோழியம், உ.வே.சா,*

**முன்னுரை**

*தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்த இடைக்கால இலக்கணங்களில் தலைசிறந்தன நன்னூலும், நம்பியகப்பொருளும், யாப்பருங்கலமும், தண்டியலங்காரமும் ஆகும். நன்னூலும் நம்பியகப்பொருளும் உள்ளடக்கத்தால் வேறுபாடுடையன. எனினும், இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்*

தமிழ்

என்ற கூற்றிற்கு ஏற்ப இரண்டுமே இலக்கியத்திலிருந்தே தரவுகளைத் திரட்டி எழுதப்பட்டிருக்க வேண்டுமாகையால் அகப்பொருள் நூலையும் நன்னூலையும் அதன் பழைய உரையாகிய மயிலைநாதருரையையும் ஆராய்ந்து அவற்றுள் உள்ள உறவுகளை உரைக்கிறது இக்கட்டுரை.

**காலம்:**

நன்னூலார் காலத்தை 13-ம் நூற்றாண்டு (1178-1216) என்று மு. இராகவையங்கார், உ.வே.சா., மு. அருணாசலம், க.ப. அறவாணன், இரா. இளங்குமரன் முதலியோர் கூறுகின்றனர். நம்பியின் காலம் கி.பி. 12 என்று மு. அருணாசலமும், கி.பி. 14 என்று க.ப. அறவாணனும் குறிப்பிடுகின்றனர்.

நன்னூலாரின் காலத்தைச் சான்றுகள் காட்டி வரையறுத்த அறிஞர்கள் (மு. அருணாசலம், க.ப. அறவாணன்) மயிலைநாதர் காலத்தை நிர்ணயிக்கும் பொருட்டு கூறும் காரணம் சிறப்பானதாக இல்லை. "நூலுக்கு உரை தேவைப்படும் அளவு பெரும்புகழ் பெறக் குறைந்தது ஒரு நூற்றாண்டு ஆகுமெனக் கொண்டாலும், இவர் காலம் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கமாகும்"[1] என்று அறவாணன் கூறுகிறார்.

இக்கருத்து வேறுகாலகட்டத்திற்குப் பொருந்தலாம். நூற்கள் தோன்றிய காலத்திலேயே உரைகளும் எழுந்த இடைக்கால இலக்கணக் காலகட்டத்திற்கு இக்கருத்து பொருந்தாது. ஏனெனில், யாப்பருங்கலக்காரிகைக்குக் குணசாகரரும், வீரசோழியத்திற்கு பெருந்தேவனாரும், நம்பியகப்பொருளுக்கு அதன் ஆசிரியரேயாகிய நம்பியும் உரை செய்தமை நினைக்கத்தக்கது. நேமிநாத பழைய உரை ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. அதே காலத்தைச் சேர்ந்தவராகவே இருக்கலாம். (உ.வே.சா. மயிலைநாதர் காலத்தைப் பற்றி வெளிப்படையாகக் கூறவில்லை. சீய கங்கனாலோ அவன் வழித் தோன்றலாலோ ஆதரிக்கப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறார்)[2]. எனவே, மயிலைநாதரும் நன்னூலார் காலத்தைச் சார்ந்தவராகவே இருக்கலாம். அந்தந்த நூல் தரவுகளைக் கொண்டு வரலாற்று முறையில் ஒப்பிட்டு நோக்கும்போது, சரியான முடிவுகள் வரலாம். நன்னூலார், மயிலைநாதர், நாற்கவிராச நம்பி மூவரும் சமகாலத்தவர்களாகலாம் என்று எண்ண இடமுண்டு.

**நன்னூலும், அகப்பொருளும்:**

நன்னூலார், மயிலைநாதர், நம்பி மூவருமே சைனசமயத்தைச் சார்ந்தவர்கள். அதுவே அவர்களுக்கு இடையே உள்ள தொடர்பினை நோக்கப் போதுமானதாகும். மயிலைநாதர் தம் உரையில் அகப்பொருள் தொடர்பான பெயர்களை (இடம், சாதி, தொழில், ஐந்திணைக் கருப்பொருட் பெயர்கள்) எடுத்துக்காட்டாக ஆண்டுள்ளார். அவற்றை ஆய்வு செய்வதன் மூலம் நம்பியகப்பொருள் மற்றும் அக்கால இலக்கண இலக்கிய நூல்களின் தாக்கம், அதற்கு முன் இருந்த இலக்கண இலக்கிய நூல்களின் தாக்கம் இவற்றைப் புரிந்து கொள்ள இயலும்.

எழுத்தும், சொல்லும் மொழிக்கு இலக்கணம் கூறுவது. பொருளதிகாரம் இலக்கியத்துக்கு இலக்கணம் சொல்லுவது. மொழியால் ஆகியதே இலக்கியம். எனவே ஒன்றன் தாக்கம் இன்னொன்றில் இல்லாமற் போகாது.

**நம்பியும் நாற்கவியும்**

நம்பி, நாற்கவி என்ற சொற்கள் இடைக்கால நூற்களில் வழங்கும் நிலையை ஆராய்ந்து நோக்குவது சிறப்பு தரும்.

நம்பி என்ற பெயர்ச்சொல்லை மயிலைநாதர் பத்து இடங்களில்[3] பயன்படுத்தி உள்ளார். சில நூற்பாக்களின் எடுத்துக்காட்டுகளுக்கு நம்பியையே முதன்மைப்படுத்தி உள்ளார்[4]. நம்பியைப் பரவலாக தம் உரையில் பயன்கொண்டுள்ளமை பற்றி இருவருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்குமோ? என ஆராயின் அது உறுதியில்லை. ஏனெனில் நம்பி என்ற சொல் அக்காலம் மட்டுமன்றி பக்தி இயக்கக் காலத்திலேயும் வழக்கில் இருந்திருக்கிறது. நன்னூலுக்கு முற்பட்ட இலக்கண நூற்களாகிய வீரசோழியம்[5], யாப்பருங்கலவிருத்தி[6], நேமிநாதம்[7] போன்றவற்றிலும் காணப்படுகின்றது. (வீரசோழியத்தைக் காட்டிலும் நேமிநாதத்திலும் பயன்பாடு அதிகரித்துள்ளமை மூலம் நேமிநாதருக்கும் நாற்கவிராச நம்பிக்கும் அதிக தொடர்பு இருக்கலாம் என்று நம்பலாம். நேமிநாதர் சமணர் என்பதும் சிந்தனைக்குரியது).

மயிலைநாதர் தொட்டு, இன்றைய நன்னூல் உரையாசிரியர்கள் உரைகளிலும் நம்பி என்ற சொல் தொடர்வது மயிலைநாதரின் தாக்கம் எனலாம்.

நாற்கவி என்ற சொல்லை மயிலைநாதர் பயன்படுத்தி உள்ளார்[8]. மயிலைநாதருக்கும் நம்பிக்கும் உள்ள தொடர்பினை நம்பி என்ற சொல்லைக் காட்டிலும் நாற்கவி என்ற சொல் உறுதி செய்கிறது என்றே கூறலாம். ஏனெனில் நான்கு கவி வகைகள் பற்றிய குறிப்புகள் நன்னூலுக்கு முன்பே வழக்கில் இருந்தாலும்[9], 'நாற்கவி' என்ற கலைச்சொல் மயிலைநாதராலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்றே தோன்றுகிறது. 'நாலுகவிப்பெருமாள்'[10] என்ற திருமங்கை மன்னனின் பட்டப்பெயர் நாற்கவியின் வேறு வடிவத்திலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**அகப்பொருள் தொடர்பான சொற்கள்**

1. 'தோன்றல்' என்ற சொல் முல்லை நிலத்தலைமகன்களில் ஒருவரைக் குறிப்பது. இச்சொல் பிற்கால இலக்கண நூல்களில் நன்னூல் மயிலைநாதர் உரையிலும்[11], நம்பியகப்பொருளிலும்[12] மட்டுமே காணப்படுகிறது. இச்சொல்லை நன்கு ஆராய்வதன் மூலம் இரண்டிற்கும் உள்ள தொடர்பினை அறிய முடியும்.

2. 'இந்திரன்' மருத நிலக் கடவுள். தொல்காப்பியத்தில் வேந்தன்[13] சங்க இலக்கியத்தில் இந்திரன்[14] என்றும், இறையனார் அகப்பொருள், வீரசோழியம், நன்னூல் (மயிலை.உரை), நம்பி அகப்பொருள் இவற்றில் இந்திரன் என்றும் காணப்படுகிறது[15]. காந்தள் என்ற குறிஞ்சி நில மலர் இறையனார் அகப்பொருள், வீரசோழியம் இவற்றிலும் காணப்படுகிறது. 'ஐவனம்' என்ற சொல் (தொல்) 'ஐவன நெல்' என்ற பெயரில் இறை.அகப்.காணப்படுகிறது.

(நன். மயிலை உரையில் வரும் ஐவனம் என்ற சொல் நம்பியகப்பொருளில் 'மலைநெல்' என்று குறிக்கப்படுவது எளிமைப்படுத்தப்பட்டது எனலாம்). 'கொன்றை' என்ற முல்லை நில மரப்பெயர் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், வீரசோழியம் முதலியவற்றின் உரைகளில் காணப்படுகிறது. நுளையர், நுளைச்சியர் என்ற நெய்தல் நில மக்கள் பெயர் இறையனார் அகப்பொருள், வீரசோழியம் இவற்றில் உள்ளன. பரத்தி, பரதர் என்ற நெய்தல் நில மக்கள் பெயர்கள் இறையனார்அகப்பொருளில் உள்ளது. 'வெற்பன்' என்ற குறிஞ்சி நிலத் தலைமகன் பெயர் இறையனார் அகப்பொருளில் காணப்படுகிறது.

மேற்கண்ட சொற்கள் அனைத்தும் மயிலைநாதர் உரையிலும், நம்பியகப்பொருளிலும் காணப்படும் பொதுவான சொற்களாகும். மேற்கண்ட

எல்லாச் சொற்களுமே இறை.அகப்பொருள் உரையிலும் காணப்படுவது கொண்டு இறையனார் அகப்பொருளின் உரையின் தாக்கத்தையும் உணரலாம். ஐந்திலக்கண நூலாகிய வீரசோழியத்தில் இவற்றுள் பெரும்பான்மையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

*3.* மேலும், மயிலைநாதருரையில் தொழில் சார்ந்த சாதிப்பெயர்கள் பலவும் வழங்கி வருகின்றன. வண்ணான்[16], வண்ணாத்தி[17], வலைச்சி, வலையர்[18], புலைச்சி[19], செட்டி, செட்டிச்சி[20]. மேற்கண்ட சாதிப்பெயர்கள் அக்கால பிற இலக்கணங்களில் இல்லை. இதற்கான தரவுகள் மயிலைநாதருக்கு எங்கிருந்து கிடைத்தன என்பது ஆராயப்பட வேண்டியது (இலக்கியத்தில் இருந்தா? வாழ்க்கையிலிருந்தா? என்பது நோக்கப்பட வேண்டும்.

நன்.210-ம் நூற்பா உரையில் மயிலைநாதர் சாதி பற்றிக் குறிப்பிடும்போது, பாண்குடி, உமண்குடி, சேரி, தோட்டம், பாடி என்ற இடப்பெயர்களைக் குறிப்பிடுகிறார். இவற்றில் குடி, பாடி, சேரி என்ற மூன்று பெயர்களை இறையனார் அகப்பொருளும், குடி, பாடி என்ற இரண்டை நம்பியும்[21] குறிப்பிடுகின்றன. சேரி நம்பியில் இல்லை. மேலும் மயிலைநாதர் கூறும் தோட்டம் என்ற இடப்பெயர் வேறு இலக்கணங்களில் காணப்படவில்லை. இதற்கான அவரின் தரவுத் தேர்வு எது?

நால் வருணப் பாகுபாட்டைக் கூறும் போது நன்னூல் உரையும்[22], நம்பி அகப்பொருளும்[23] ஒன்றுபட்டுள்ளன.

**பிற ஒற்றுமைகள்**

செய்யுளுக்குப் பொருத்தமான விதிகளாக நன்னூலில் 19 நூற்பாக்கள் உள்ளன.[24]

பெயரியலில் சொல்லுக்கு இலக்கணம் கூறும்போதே நன்னூலார்[25] ‘வழக்கொடு செய்யுளின் வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே’ என்று கூறுவது நன்னூல் வழக்குக்கும் செய்யுளுக்கும் உரியது என்பதை விளக்கும்.

எட்டுவகைப் பொருள்கோள்களைப் பற்றி நன்னூலார் விளக்கியுள்ளார்[26]. குறிப்பிடுகிறார். நம்பி[27] ஒன்பது வகைப் பொருள்கோள்களைக் குறிப்பிட்டுள்ளார்.

காலம் பற்றிய நன்னூலாரின் கூற்றும் (நன்.381), நம்பியின் கூற்றும் (அகப்பொருள் விளக்கம். 228) ஒரே போன்று உள்ளமை உரைக்கத்தக்கவை.

**தொகுப்புரை:**

1. நன்னூலார், அகப்பொருள் விளக்க நூலாசிரியர் நாற்கவிராச நம்பி, நன்னூல் முதல் உரையாசிரியராகிய மயிலைநாதர் மூவரும் சமகாலத்தவராக இருக்கலாம் என்பது ஆராயப்பட்டுள்ளது.
2. நம்பி, நாற்கவி என்னும் சொற்கள் இம்மூன்று நூல்களிலும் காண்படும் திறம் ஆராயப்பட்டுள்ளது.
3. தோன்றல், இந்திரன் என்னும் சொற்கள் இம்மூன்று நூல்களிலும் சிறப்பாக வந்துள்ளமை ஆராயப்பட்டுள்ளன.
4. தொழில்சார்ந்த பெயர்களை மூவரும் பயன்படுத்தியுள்ளமை கூறப்பட்டுள்ளன.
5. சில இடப்பெயர்களைப் பயன்படுத்துவதில் காணப்படும் ஒற்றுமைகள் விளக்கப்பட்டுள்ளன.
6. செய்யுள் பற்றியும், பொருள்கோள் பற்றியும், காலம் பற்றியும் மூவரும் கூறியுள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**முடிவுரை:**

எழுத்துக்கும், சொல்லுக்கும் உரை கூறினாலும், மயிலைநாதர் அகப்பொருளோடு தொடர்புபட்டு உரை எழுதியுள்ளமை அறிய முடிகிறது. இலக்கணங்களுக்கிடையிலான ஒப்பீட்டுக் கல்வி மொழிவரலாற்றுக் கல்விக்கு மிகவும் உறுதுணையாகும்.

**அடிக்குறிப்புகள்:**

1. அறவாணன், க. ப. மறுபதிப்பு 1993. *சமணம் வளர்த்த தமிழ் இலக்கணம்*, சமணாலயம். பக்.302
2. சாமிநாதையர், உ. வே. 1946. *நன்னூல் மயிலைநாதர் உரை*. ப. 19
3. நன்.மயிலை.உரை. 158, 239, 241, 275, 351, 159, 241, 308
4. நன்.மயிலை.உரை.239, 241
5. *வீரசோழியம்*, காரிகை. உரை.134

6. யாப்பருங்கலம் விருத்தியுரை 111, 130
7. நேமிநாதம். வெண்பா. உரை. 36, 37, 46, 49, 56
8. நன்னூல் மயிலைநாதர் உரை.190
9. யாப்பருங்கல விருத்தி. 552
10. திருமங்கையாழ்வார். (குருபரம்பரை.)
11. நன்னூல் மயிலைநாதர் உரை 158, 304, 309
12. அகப்பொருள் விளக்கம் நூற்பா.22
13. "....வேந்தன் மேய தீம்புனல் உலகமும்.." (தொல்.பொருள்.அக.5)
14. 'இந்திர விழவு (ஐங். 62); இந்திரவிழவிற் பூவினன்ன (ஐங். 62); வச்சிரத்தான் (பரி. 18); ஐயிருநூற்று மெய் நயனத்தவன் (பரி. 9); இடியேற்றை உடையவன் (பரி. 8); வானவில்லை வில்லாகக் கொண்டவன் (பரி. 28); ஏறு அதிர்க்கும் இந்திரன் இரும் உருமென (பரி. 8); ஆயிரங்கண்ணோன் (கலி. 105); வச்சிரத்தடக்கை நெடியோன் (புறம். 241); இந்திரர் அமிழ்தம் (புறம். 182); திருக்கிளர் செல்வன் (திருமுருகு. 159); யானையை ஊர்தியாக உடையவன் (திருமுருகு. 159)'
15. பார்க்க: அட்டவணை: வசந்தாள், த. 1990, தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் — ஒரு வரலாற்றுப் பார்வை, முதல் பதிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம்.
16. நன்னூல் மயிலைநாதர் உரை.144
17. நன்னூல் மயிலைநாதர் உரை. 140
18. நன்னூல் மயிலைநாதர் உரை.138, 140, 144
19. நன்னூல் மயிலைநாதர் உரை.138, 140
20. நன்னூல் மயிலைநாதர் உரை. 139, 275
21. அகப்பொருள் விளக்கம். நூற்.20
22. நன்னூல் மயிலைநாதர் உரை. 369
23. அகப்பொருள் விளக்கம். 30
24. நன்னூல்.119, 258, 266-9, 410-418, 365-6, 392, 407-8.
25. நன்னூல். 258
26. நன்னூல் 410.
27. அகப்பொருள் விளக்கம். 233

துணைநூற்பட்டியல்

1. அரவிந்தன், மு. வை. 1995 மறுபதிப்பு. உரையாசிரியர், மறுபதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.180.

2. அருணாசலம், மு. 1969, தமிழ் இலக்கிய வரலாறு (14-ம் நூற்), காந்தி வித்யாலயம், மாயூரம், தஞ்சை

2. அறவாணன், க. ப. 1993 , மறுபதிப்பு. சமணம் வளர்த்த தமிழ் இலக்கணம், சமணாலயம், சைன இளைஞர் மன்றம், சென்னை.17

3. அறவாணன், க.ப. சைனரின் தமிழிலக்கண நன்கொடை, மோகன் நகர், புதுச்சேரி-3.

4. இளங்குமரன், இரா. 1999, இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108.

5. கோவிந்தசாமிப்பிள்ளை, இராம. 1962. அகப்பொருள் விளக்கவுரை, சரசுவதி மகால் நூலகம், தஞ்சை.

6. சக்திவேல், சு. 2000, தமிழ்மொழி வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை — 108.

7. சாமிநாதையர், உ. வே. 1946. நன்னூல் மயிலைநாதருரை. உ.வே.சா. நூல்நிலையம், சென்னை.

8. சீனிவாசன், இரா. தமிழ் இலக்கண மரபுகள், தி பார்க்கர், இராயபேட்டை, சென்னை-14.

9. நேமிநாதர், (பதிப்பு: ஆசிரியர் குழு) 1945. நேமிநாதம். திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

10. புத்தமித்திரனார், (பதி. ஆசிரியர் குழு) 1970.வீரசோழியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

11. வசந்தாள், த. 1990. தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் — ஒரு வரலாற்றுப் பார்வை, முதல் பதிப்பு, சென்னைப் பல்கலைக்கழகம்.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X


## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2020, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


www.aranejournal.com

aranjournal@gmail.com

72995 87879